

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 13 – வெள்ளிக்கிழமை 27 மார்ச் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 225 : Thiruvalluvar Year - 2057 - Panguni 13 - Friday 27 March 2026 - Madurai 10 Pages ₹ 5.00


## பிளஸ் 2 தேர்வு நேற்றுடன் நிறைவுற்றது!



சென்னை, மார்ச் 27-

தமிழகம், புதுச்சேரியில் 10ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கான பொதுத் தேர்வில் நேற்று 12 ஆயிரம் பேர் தேர்வு எழுத வரவில்லை என்று தேர்வுத்துறை அறிவித்துள்ளது. பிளஸ் 2 வகுப்பு தேர்வுகள் நேற்றுடன் முடிவுற்றது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 10ம் வகுப்பு தேர்வு கடந்த 11ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. இதுவரையில் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்களுக்கான தேர்வுகள் நடந்து முடிந்துள்ளன. நேற்று முன்தினம் நடந்த கணக்கு தேர்வில் தமிழகம், புதுச்சேரியில் இருந்து மொத்தம் 9 லட்சத்து 569 மாணவ, மாணவியர் பதிவு செய்திருந்தனர்.

அவர்களில் பள்ளி மாணவர்கள் 8 லட்சத்து 82 ஆயிரத்து 806 பேர், தனித் தேர்வர்கள் 17 ஆயிரத்து 763 பேர். இந்நிலையில் நேற்றைய முன்தினம் தேர்வில் பள்ளி மாணவர்கள் 11 ஆயிரத்து 284 பேரும், தனித் தேர்வர்கள் 1524 பேரும் பங்கேற்கவில்லை. இதையடுத்து, 10ம் வகுப்பு தேர்வில் அறிவியல், சமூக அறிவியல், மற்றும் விருப்ப மொழிப் பாட தேர்வுகள் என 3 தேர்வுகள் நடக்க இருக்கின்ற நிலையில், ஏப்ரல் 6ம் தேதி தேர்வுகள் முடிகின்றன.

## காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு: பொதுமக்கள் கடும் பாதிப்பு!

வாலாஜாபாத், மார்ச் 27-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை லோடு வருவதால், காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக அதிகாலை காஸ் ஏஜென்சி முன்பாக பொதுமக்கள் காத்திருக்கின்றனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் வீட்டு உபயோக சிலிண்டர் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இல்லத்தரசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்நிலையில் வாலாஜாபாத் அடுத்த கட்டவாக்கத்தில் இருந்து ஊத்துக்காடு வரை செல்லும் சாலையை ஒட்டி தனியார் சிலிண்டர் ஏஜென்ட் செயல்படுகின்றன. இங்கு நாள்தோறும் பதிவு செய்யப்படும் சிலிண்டர்களை சுற்றுவட்டார கிராம மக்கள் இங்கு வந்து பெற்று செல்வது வழக்கம்.

இந்நிலையில் தற்போது நிலவிவரும் சிலிண்டர் தட்டுப்பாட்டால் அதிக அளவில் சிலிண்டர் பதிவு செய்யப்படாத நிலையில் பதிவு செய்யப்பட்ட சிலிண்டர்களை பெறுவதற்காக நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் வந்து செல்கின்றனர்.



மேலும், பதிவு செய்யப்படும் சிலிண்டர் பெறுவதற்காக ஒரே நேரத்தில் அதிகாலையிலேயே நூற்றுக்கணக்கானோர் அந்தந்த காஸ் சிலிண்டர் விநியோகஸ்தர் அலுவலகங்களில் நீண்ட வரிசையில் நிற்பது தொடர்கதையாக மாறி வருகின்றன.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் வரலாறு காணா வகையில்

# மகளிர் தொழில் முனைவோர் எண்ணிக்கை 7 மடங்கு உயர்வு!

## ஒன்றிய அரசு தகவல்!

**சென்னை, மார்ச் 27-**

**‘திராவிட மாடல்’ ஆட்சியில் வரலாறு காணா வகையில் மகளிர் தொழில் முனைவோர் எண்ணிக்கை 5 ஆண்டுகளில் 7 மடங்கு உயர்வு! 2021-2022 இல் மகளிர் தொழில் முனைவோர் எண்ணிக்கை 1 இலட்சத்து 26 ஆயிரம்! 2024-2025 இல் இது 9 இலட்சத்து 4 ஆயிரமாக உயர்ந்தது! பி.ஜே.பி ஆளும் குஜராத் மாநிலத்தில் மகளிர் தொழில் முனைவோர் 2 இலட்சத்து 18 ஆயிரம் மட்டுமே, ராஜஸ்தான் மாநிலத்திலும் 3 இலட்சத்து 36 ஆயிரம் மட்டுமே! மகளிர் சாதனையில் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் பெருமைகள் குன்றின் மேலிட்ட விளக்காய் புகழொளி பரப்புகிறது என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.**

மனித சமுதாயத்தில் ஏறத்தாழ சரிபாதியாக இருக்கும் மகளிர் சமுதாய முன்னேற்றத்தில் திராவிட இயக்கம் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அதனால் இந்தியாவிலேயே அதிகமாக பெண்கள் கல்வி, அறிவியல், பொருளாதாரம், தொழில் முதலிய அனைத்திலும் ஆற்றல்கள் பெற்று பன்முகத் திறன்களுடன் வளர்ந்து இந்திய அளவில் முன்னிலை பெற்றுத் திகழ்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், திராவிட நாயகர் அவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் திட்டங்களை முறையாக வகுத்துச் செயல்படுத்திட இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024ஐ உருவாக்கி தமிழ்நாட்டில் மகளிர் நலம் காத்து வருகிறார்கள்.

### பெண்கள் முன்னேற்றத்திற்கு அடித்தளம்!

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே விடியல் பயணம் திட்டத்திற்கு முதல் கையெப்பமிட்டு ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பெண்கள் முன்னேற்றத்திற்கு



அடித்தளம் அமைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து இல்லத்தரசிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்,

பெண்கள் அனைவரும் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காக புதுமைப்பெண் திட்டம்,

படித்து முடித்து வேலைக்காக நகர்ப்புறம் வரும் பெண்கள் பாதுகாப்புடன் பணிபுரிய தோழி விடுதிகள் திட்டம் ஆகியவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள்.

சத்துணவு திட்டத்தில் பணிபுரியும் ஏறத்தாழ 2 இலட்சம் மகளிர் பயன்பெற அவர்களின் ஓய்வு வயது 58 என்பதை 60 ஆக உயர்த்தியுள்ளார்கள்.

மகளிர் சுயஉதவி குழு கடன்கள் 2755.99 கோடி ரூபாயை ரத்து செய்து 1,17,617 மகளிர் சுயஉதவி குழுக்களை சேர்ந்த 15,88,309 மகளிர், கடன்களில் இருந்து விடுதலை பெறச் செய்தார்கள்.

இவை போலவே மகளிர் சுயஉதவி குழு கடன் உச்சவரம்பை உயர்த்தினார்கள். கைம்பெண்களுக்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்திட வகை செய்துள்ளார்கள்.

ஆதிதிராவிடர் மகளிர் நிலம் வாங்குவதற்கு நிதி உதவி செய்யும் நன்னிலம் மகளிர் நிலஉடைமைத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளார்கள்.

மகளிர் ஓட்டுநருக்கு இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் வழங்கி அவர்கள் தொழில் புரிய வழிகாட்டினார்கள்!

அரசு ஊழியர் ஆசிரியர்களின் மகப்பேறு விடுப்பு காலத்தை 12 மாதங்களாக உயர்த்தினார்கள்!.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் தேர்தல்கள் நடத்தி 50 சதவீத இடங்களில் மேயர் முதலான பொறுப்புகளை மகளிருக்கு வழங்கினார்கள்.

பெண்கள் பெயரில் நிலம் வாங்கி பதிவுச் செய்தால் பதிவு கட்டணத்தில் 1 சதவீதம் குறைத்துள்ளார்கள்!

### புரட்சிகரமான திட்டங்கள்!

இப்படி, இந்தியாவில் எந்த மாநிலமும் எண்ணிப்பார்க்காத புதிய புரட்சிகரமான திட்டங்களை ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தொடர்ந்து நிறைவேற்றி வரும் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்கி உலகில் தொழில் முகவர்களாக உயர்ந்திட வேண்டும் என்பதற்காகவும் தாராளமாக நிதி உதவி வழங்கி வருகிறார்கள்.

ஆண்களுக்கு நிகராகத் தொழில் தொடங்க ஆர்வம் கொண்டுள்ள 32 ஆயிரத்து 332 மகளிர் தொழில் முனைவோருக்கு 191 கோடியே 23 இலட்சம் ரூபாய் கடன் வழங்கி அவர்களைத் தொழில் முனைவோர் ஆக்கியுள்ளார்கள்.

இப்படித் தொழில் புரியும் மகளிரை ஊக்கப்படுத்தி தேவையான உதவிகள் அனைத்தையும் ‘திராவிட மாடல்’ ஆட்சி செய்துவருவதால் ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள தரவுகள் மூலம் இந்தியாவிலேயே மிக அதிகமான பெண் தொழில் முனைவோர் இருப்பது தமிழ்நாடு தான் என்னும் உண்மை உரக்கச் சொல்லப் பட்டுள்ளது. இதன் மூலம் பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றுள்ளது.

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் கடந்த 2021-2022 ஆம் நிதியாண்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடங்கிய காலகட்டத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர பெண் தொழில் முனைவோரின்எண்ணிக்கை, ஒரு இலட்சத்து 26 ஆயிரமாக இருந்தது.

### குன்றின் மேலிட்ட விளக்காகப் புகழொளி பரப்புகிறது!

அந்த எண்ணிக்கை, கடந்த 5 ஆண்டுகளில் 7 மடங்கு உயர்ந்து, 2024-2025-ம் நிதியாண்டில், 9 இலட்சத்து 4 ஆயிரமாக உயர்ந்து மாபெரும் சாதனை படைத்துள்ளது தமிழ்நாடு என்பது குன்றின் மேலிட்ட விளக்காகப் புகழொளி பரப்புகிறது!

அதே நேரத்தில், பி.ஜே.பி ஆட்சி செய்யும் குஜராத் மாநிலத்துடன் ஒப்பிட்டால் அங்கு சிறு, குறு மற்றும் நடுத்தரப் பெண் தொழில்முனைவோரின் எண்ணிக்கை வெறும் 2.18 இலட்சம்தான். அதே போல ராஜஸ்தான் மாநிலத்திலும் திராவிட மாடல் ஆட்சியை விடக் குறைந்து, 3.36 இலட்சமாகத்தான் உள்ளது.

அண்மையில் சில நாள்களாக வெளிவந்து கொண்டிருக்கும் 2024-2025 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான அறிக்கைகள், புள்ளிவிவரங்கள் ஒவ்வொன்றும் தமிழ்நாட்டின் ‘திராவிட மாடல்’ ஆட்சியே முதல் இடத்திலும் முன்னிலையிலும் திகழ்வதை பறைசாற்றுகின்றன.

## டெல்லி பா.ஜ.க.விடம் அடிபணிந்து விட்டார்!

# பீகாரில் நிதிஷ்குமாருக்கு ஏற்பட்ட நிலைதான் ஏற்படும்!

### எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பதிலடி!

சென்னை, மார்ச் 27-

அ.தி.மு.க. கூட்டணியில் அனைத்து முடிவுகளையும் எடுப்பது அமித்ஷா தான் என்றும் பா.ஜ.க. விடம் பழனிசாமி அடிபணிந்து விட்டதாகவும் அமைச்சர் சிவசங்கர் பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னை பசுமை வழிச்சாலையில் செய்தியாளர்களைச் சந்தித்த போக்குவரத்துத்துறை சிவசங்கர், டெல்லி பா.ஜ.க.விடம் எடப்பாடி பழனிசாமி அடிபணிந்து விட்டார் என்பது மக்கள் அனைவருக்கும் நன்றாக தெரி யும் என்று கூறியுள் ளார். அ.தி.மு.க. கூட்டணியில் அனைத்து முடிவுகளையும் எடுப்பது அமித்ஷாதான் எடுப்பதாகவும் விமர்சித்துள்ளார். பீகாரில் நிதிஷ்குமாருக்கு ஏற்பட்ட நிலைதான், பழனிசாமிக்கு ஏற்படும் என்றும் அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

**தி.மு.க.வின் முந்தைய தேர்தல் அறிக்கையை காப்பியடித்த அ.தி.மு.க.**

தி.மு.க.வின் முந்தைய தேர்தல் அறிக்கையையும், தி.மு.க. வின் சாதனைகளையும் காப்பியடித்து அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையாக வெளியிட்டுள்ளதாகவும் அவர் விமர்சித்துள்ளார். அனைத்துத் தரப்பு மக்களின் கருத்துக்களையும் பிரதிபலிக்கும் விதமாக தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை சிறப்பாக வெளியிடப்படும் என்றும் அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

## மகளிர் இடஒதுக்கீடு :

# அரசியல் ஆதாயம் தேடும் மோடி!

### காங்கிரஸ் விமர்சனம்!

புதுடெல்லி, மார்ச் 27-

காங்கிரஸ் பொது செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று கூறியதாவது:-

எல்பிஜி காஸ் மற்றும் எரிசக்தி நெருக்கடி ஆகியவற்றிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பு வதற்கான மோடியின் மக்கள் திசைதிருப்ப மகளிர் இடஒதுக்கீடு ஆயுதத்தை கையில் எடுத்துள்ளார். நாரி வந்தன் அதினியம் மசோதா(பெண்கள் இடஒதுக்கீடு 2023),மக்களவை, சட்டமன்றங்களில் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளிக்க அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

மகளிர் இட ஒதுக்கீட்டை உடனடியாக கொண்டுவர வேண்டும் என நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது. அப்போது, தொகுதி மறுவரையறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிக்காமல் இதை செயல்படுத்துவது சாத்தியமில்லை என்று அரசு அப்போது தெரிவித்தது.

பல்டி அடிப்பதில் வல்லவரான மோடி 30 மாதங்களுக்கு பின் இப்போது தனது மனநிலையை மாற்றி கொண்டு தொகுதி மறுவரையறை முடிக்காமல், மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்காமல் பெண்கள் இடஒதுக்கீட்டை செயல்படுத்த விரும்புகிறார்.

இப்போது சட்டமன்ற தேர்தல் நடக்க உள்ள நிலையில் தேர்தல் ஆதாயத்துக்காக அவர்(மோடி), நாரி வந்தன் அதினியம் 2023 மசோதாவில் தேவையான திருத்தங்களை செய்ய அடுத்த 2 வாரங்களில் இரண்டு நாள் சிறப்பு அமர்வு கூட்டப்படும் என்று அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் நாடாளுமன்ற கூட்டம் தேர்தல் நடத்தை விதியை மீறும் நடவடிக்கை. இதனால் ஏப்ரல் 29ம் தேதி தேர்தலுக்கு பின் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று கோரி காங்கிரஸ் கட்சி அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது என்றார்.



மதச் சார்பின்மை, மாநில உரிமை, சமூக நீதி, சமத்துவம் எனும்

4 வைரத் தூண்களின் மேல் எழுந்துள்ள கோட்டை நமது கூட்டணி ; வெல்வோம் ஒன்றாக !

